©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 9.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 191A] சென்னை, சனிக்கிழமை, ஜூன் 24, 2017
ஆனி 10, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

**பொருளடக்கம்**

**தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்** பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:–**

எண் 22/2017—தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச்சட்டம் .. 2–16

எண் 23/2017—தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. 17–20

எண் 24/2017—தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. 21–23

**2017—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2017.**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி விதிப்பதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம்,— 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச்சட்டம் என்று அழைக்கப்படும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாக குறிப்பிடப்படும் நாளன்று நடைமுறைக்கு வரும். இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகை முறைகளுக்கு வெவ்வேறு தேதிகள் குறித்துரைக்கப்படலாம்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், சூழ்நிலை வேறு பொருள்குறித்தாலன்றி,—

(1) ''அனுமதித்தல்'' என்பது, பார்வையாளராக அல்லது அரங்கத்தாரில் ஒருவராக அனுமதித்தல் மற்றும் பொழுதுபோக்கும் நோக்கத்திற்காக கேளிக்கையில் அனுமதித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(2) ''கேளிக்கை ஒன்றிற்கு அனுமதித்தல்'' என்பது, கேளிக்கை நடைபெறும் எந்த ஒரு இடத்திற்குள்ளும் அனுமதித்தலை உள்ளடக்கும்;

(3) ''பொழுதுபோக்கு'' என்பது, பொழுதுபோக்கு அரங்கம் அல்லது பொழுதுபோக்குப் பூங்கா அல்லது கேளிக்கை பூங்கா அல்லது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அதுபோன்றவற்றில், அனுமதிப்பதற்காக நபர்கள் கட்டணம் செலுத்த கோரப்படும் பொழுதுபோக்கு நிகழ்ச்சி எதுவும் என்று பொருள்படும்;

(4) ''அலைவாங்கி'' என்பது, தொலைக்காட்சி சமிக்கை பெறுகிற ஒரு கருவி, தேசிய அல்லது பன்னாட்டு செயற்கைக்கோள் ஒளிபரப்புகளை பெறுவதற்கு பார்வையாளர்களை இயல்வித்தல் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக எழுப்பப்பட்ட அல்லது நிறுவப்பட்ட கருவி என்று பொருள்படும்;

(5) ''கம்பிவடத்தொலைக்காட்சி'' என்பது, காணொலி சுருள்பேழை அல்லது தட்டுகள் அல்லது இரண்டினையும் பயன்படுத்தி, ஒளிப்பதிவு செய்யும் சாதனம் அல்லது ஒளிபரப்பு சாதனம் அல்லது முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட காணொலி சுருள்பேழை அல்லது தட்டுக்கள் அல்லது இரண்டின் மூலம் ஒளிபரப்பப்படும் அதுபோன்ற கருவி அல்லது மறுபடியும் மறு ஒளிபரப்பப்படும் படச்சுருள் அல்லது இயங்கும் படங்கள் அல்லது திரைப்படங்களின் தொகுப்புகள் ஆகியவை தொலைக்காட்சி பெட்டி மூலம், இணைப்பு வைத்திருப்பவரின் குடியிருப்பிடத்தில் அல்லது குடியிருப்பில்லாதயிடத்தில் பார்க்கப்படவும் மற்றும் கேட்கப்படுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்புமுறை என்று பொருள்படும்;

(6) ''அன்பளிப்பாகக் கொடுக்கப்படும் நுழைவுச்சீட்டு'' என்பது, கட்டணம் எதுவும் இல்லாமல் அல்லது அத்தகைய அனுமதிக்காக குறைந்த வீத கட்டணத்தில் கேளிக்கைக்கு அனுமதிப்பதற்கான ஒரு நுழைவுச்சீட்டு அல்லது ஒரு அனுமதிச்சீட்டு என்று பொருள்படும்;

**விளக்கம்**.—இந்தக்கூறின் மற்றும் (18) ஆம் கூறின் நோக்கங்களுக்காக, செலுத்துவது இல்லாமல் கேளிக்கை எதற்கும் அனுமதியளிப்பதற்காக இந்தச் சட்டம் அல்லது பிற ஏதேனும் சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ கேளிக்கை இடம் எதினுள்ளும் அல்லது கேளிக்கை எதன் தொடர்பான பணி எதனையும் அல்லது அவருக்குச் சுமத்தப்பட்ட பணி எதனையும் செய்து வரும் நபருக்கு உரிமையாளரால் வழங்கப்படும் அதிகார உரிமையை உள்ளடக்காது;

(7) ''நேரடி வீட்டுச்சேவை'' என்பது கம்பிவடம், இயக்குபவர் போன்ற இடையீட்டாளர் இல்லாமல் சந்தாதாரர்களுக்கு செயற்கைக்கோள் சமிக்கைகள் மூலம் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சி, திரைப்படம் அல்லது பிற ஏதேனும் நிகழ்ச்சி எதனையும் காட்டுதல் என்று பொருள்படும்;

(8) ''கேளிக்கை'' என்பது, குதிரைப்பந்தயம் அல்லது திரைப்படக் காட்சிக்கு நபர்கள் பணம்செலுத்துகையின் பேரில் அனுமதித்தல் அல்லது பங்களிப்பு அல்லது சந்தா அல்லது எந்த வகையான முறையிலும் வசூலிக்கப்படும் நிறுவுகை அல்லது இணைப்புக் கட்டணங்கள் அல்லது பிற ஏதேனும் கட்டணங்கள் செலுத்துமாறு கோரப்படும் நபர்களுக்கு தொலைக்காட்சி காட்டுதல் அல்லது பொழுதுபோக்கு அல்லது பந்து எறிதல், பந்தாட்டம், மேடைக்கோல் பந்தாட்டம் அல்லது அது போன்ற விளையாட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மனமகிழ் கூடம் அல்லது நேரடி வீட்டு சேவை, அல்லது இந்திய பிரிமியர் லீக்கால் நடத்தப்படும் ஒரு கிரிக்கெட் விளையாட்டுத்தொடர் அல்லது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தினால் நடத்தப்படும் இருபது 20 கிரிக்கெட் விளையாட்டுப்போட்டி சேம்பியன்லீக், அல்லது தனி நபராலோ, நபர்களின் அமைப்பாலோ, அனுமதிக்காக கட்டணம் கோரும் எந்த பிற விளையாட்டு தொடர்கள்.

**விளக்கம்.–**இந்தக் கூறின் மற்றும் இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளின் நோக்கங்களுக்காக, ''திரைப்படக்காட்சி நிகழ்ச்சி'' என்பது, காணொலி சுருள் பேழை மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்பு மூலம் தொலைக்காட்சி திரையில் காட்டுதலையும் உள்ளடக்கும்.

(9) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(10) ''நிறுவனம்'' என்பது, நிறுமம், சங்கம், குழுமம், அல்லது எப்பெயரிலும் அழைக்கப்படும் நபர்களின் பிற கழகத்தை உள்ளடக்கும்.

(11) ''உள்ளாட்சி அதிகார அமைப்பு'' என்பது, –

(a) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட மாநகராட்சி, அல்லது

தமிழ்நாடு சட்டம் V/1920.

(b) 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட நகராட்சி அல்லது பேரூராட்சி, அல்லது

தமிழ்நாடு சட்டம் 21/1994.

(c) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைத்து ருவாக்கப்பட்ட ஊராட்சி,–

ஆகியவற்றின் எதனுடைய அதிகார வரம்பில் கேளிக்கைக்கு வகை செய்யப்பட்டுள்ளதோ, அவை என்று பொருள்படும்;

(12) ''புதிய திரைப்படம்'' என்பது, பத்தாண்டுகளுக்கு மேற்படாத திரைப்படம் என்று பொருள்படும்;

மத்திய சட்டம் XXXVII / 1952.

**விளக்கம்.**— இந்தக் கூறின் மற்றும் (13) ஆம் கூறின் நோக்கங்களுக்காக, பத்தாண்டுகள் கால அளவு, 1952 ஆம் ஆண்டு திரைப்படச்சட்டத்தின்படி முதல் முறை திரைப்படத்திற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்;

(13) ''பழைய திரைப்படம்'' என்பது, பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட திரைப்படம் என்று பொருள்படும்;

(14) ''அனுமதிக்கான செலுத்துகை'' என்பது

(i) கேளிக்கை இடத்தின் ஒரு பகுதிக்கு, பின்னர் அதன் மற்றொரு பகுதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு நபரால் செய்யப்படும் எந்த அனுமதிக்கான செலுத்துகையானது கோரப்படுகிற வரியை அல்லது உயர் வரியை உள்ளடக்கியிருக்கிறதோ அந்தச் செலுத்துகை;

(ii) கேளிக்கை நடைபெறும் இடத்திலுள்ள இருக்கைகள் அல்லது பிற இடவசதிக்கான எந்த செலுத்துகையை;

(iii) கேளிக்கைக்குரிய அனுமதிக்கான செலுத்துகை ஏதுவாயிருப்பினும், அதற்குக் கூடுதலான கேளிக்கைக்கு வருகைதருதல் அல்லது தொடர்ந்து வருகை தருதலுக்கான நிபந்தனை விதிக்குமாறு கோரும் நபர், கேளிக்கை தொடர்பான எந்தவகையான நோக்கத்திற்காகவும் செலுத்துகிறாரோ அந்த செலுத்தகை என்று பொருள்படும், மற்றும்

தமிழ்நாடு சட்டம் IX/ 1955.

(iv) வரிவிதிக்கப்படதக்க அன்பளிப்பு நுழைவுச் சீட்டு பொறுத்து 4–ஆம் பிரிவின்படி செய்யப்பட்டுள்ளதாக கருதப்படும் செலுத்துகை எதுவும் என்று பொருள்படும். ஆனால், 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி அவ்வப்போது உள்ளாட்சி அமைப்பின் ஆணையின் மூலம் திரைப்படக்காட்சி நிகழ்ச்சிக்கான உரிமம்தாரர் வசூலிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற மற்றும் வசூலிக்கப்பட்ட பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக்காது;

வரம்புரையாக அத்தகைய பராமரிப்புக் கட்டணம் நுழைவுச்சீட்டுகளின் மீது அச்சடிக்கபடுதல் வேண்டும்.

(15) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, உள்ளாட்சி அமைப்பினால் செய்யப்பட்ட துணை விதிகள் அல்லது அரசால் செய்யப்பட்ட விதிகளில் வகுத்துரைக்கப்பட்டு என்று பொருள்படும் ;

(16) கேளிக்கை எதன் தொடர்பாக, "உரிமையாளர்" என்பது 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி திரைப்படக்காட்சி உரிமைதாரர், அல்லது 1984ஆம் ஆண்டு, தமிழ்நாடு காணொலி சுருள்பேழை, பதிவுகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்பு மூலம் தொலைக்காட்சி திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி காணொளி சுருள் பேழை பதிவு மூலம் அல்லது கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்பு மூலம் திரைப்படத்தைக் காட்டும் உரிமம்தாரர் அல்லது பொழுதுபோக்கு எதனையும் வகைசெய்கிற நபர் எவரும் அல்லது மனமகிழ் கூடத்திற்கு வகைசெய்கிற நபர் எவரும் அல்லது நேரடி வீட்டுச் சேவை அல்லது இந்திய பிரிமியர் லீக் ஏற்பாடு செய்யும் எந்த நபரும் அல்லது இந்தியாவில் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் கிரிகெட்டிற்கு வகைசெய்கிற நபர்எவரும் அல்லது பிற விளையாட்டுத் தொடர் நடத்தும் எந்த நபரும் அல்லது நபர்களின் அமைப்பும் என்று பொருள்படும்; மற்றும் அரசு, உள்ளாட்சி அமைப்பு எதுவும் அல்லது அதன் மேலாண்மைக்கு பொறுப்புடைய நபர் எவரையும் உள்ளடக்கும்.

தமிழ்நாடு சட்டம் IX/ 1955.

தமிழ்நாடு சட்டம் 7 /1984.

(17) "மனமகிழ் கூடம்" என்பது பந்து எரிதல், பந்தாட்டம், மேடைக்கோல் பந்தாட்டம் அல்லது எந்தவொரு பெயரால் அழைக்கப்பட்டாலும், அதுபோன்று விளையாட்டு எந்த இடத்தில் நடைபெறுகிறதோ, அதற்கான அனுமதிக்கு அல்லது அதில்பங்கு கொள்வதற்கு நபர் செலுத்துகை செய்யுமாறு கோரப்படும் இடம் எதுவும் ;

(18) "வரிவிதிக்கப்படதக்க அன்பளிப்பு நுழைவுச்சீட்டு" என்பது, பத்து அன்பளிப்பு நுழைவுச்சீட்டுகளுக்கு மிகையாக வழங்கப்பட்ட அன்பளிப்பு நுழைவுச்சீட்டு எதுவும் அல்லது கேளிக்கை இடத்தின் இருக்கை எண்ணிக்கை அளவின் இரண்டு விழுக்காடு, இதில் எது குறைவானதோ,– அது

(a) ஒற்றை நுழைவுச்சீட்டு அல்லது அனுமதியைப் பொறுத்தவரை, கேளிக்கை ஒவ்வொன்றுக்குமான; அல்லது

(b) பருவ சீட்டு அல்லது அனுமதியைப் பொறுத்தவரை, ஒவ்வொரு பருவத்திற்கான நுழைவுச்சீட்டு அல்லது அனுமதிச்சீட்டு, என்று பொருள்படும்:

வரம்புரையாக கிரிக்கெட் விளையாட்டு அல்லது பிற விளையாட்டுகள் பொறுத்தவரை, விளையாட்டரங்கத்தின் இருக்கை எண்ணிக்கையளவில் இரண்டு விழுக்காட்டிற்கு மிகையாக வழங்கப்பட்ட அன்பளிப்பு நுழைவுச்சீட்டு எதுவும் வரி விதிக்கப்படத்தக்தாகும்.

**விளக்கம்**.—இந்தக்கூறின்படி வரிவிதிக்கப்படத்தக்க அன்பளிப்பு நுழைவுச் சீட்டினை முடிவுசெய்யும் நோக்கத்திற்காக, நுழைவுச் சீட்டின் பின்னம் எதுவும் ஒரு நுழைவுச் சீட்டாகக் கருதப்படுதல் வேண்டும்.

(19) "தொலைக்காட்சி கண்காட்சி" என்பது, தலைப்பு முடிவு என்று அழைக்கப்படும் மைய அமைப்பு முறையுடன் உலோக தந்திவட இணைப்பு அல்லது கண்ணாடி இழை அமைப்பு வடம் மூலம் இணைக்கப்பட்ட, குடியிருப்பிடத்தில் அல்லது குடியிருப்பிடமல்லாத இடத்தில், தொலைக்காட்சி பெட்டிகளின் சந்தாதாரர்கள் கம்பிமூலம் தொலைக்காட்சி ஒளிபரப்பு சமிக்கைகள் வழியாக திரைப்படம் அல்லது இயங்கும்படங்களின் தொடர், கம்பிவடம் இணைக்கப்பட்ட எந்த விதமான அலைவாங்கி உதவியுடனுமான தொலைகாட்சி அல்லது கம்பிவடத் தொலைக்காட்சி நிகழ்ச்சி, என்று பொருள்படும்,

(20) "ஆண்டு" என்பது, நிதியாண்டு என்று பொருள்படும்.

கேளிக்கைகள் மீதான வரி.

3. (1) பின்வரும் கேளிக்கைகள் மீது (இதன்பின்பு இதில் கேளிக்கைகள் மீதான வரி என்று பொருள்படும்) வரியானது, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பினால் விதிக்கப்படும் மற்றும் அதற்குச் செலுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

(a) திரையரங்குகளில் காட்டப்படும் திரைப்படக்காட்சி ;

(b) குதிரைப் பந்தயம் ;

(c) காணொளி சுருள் பேழை மூலமாக அல்லது கம்பிவடத் தொலைக்காட்சி அமைப்பு மூலமாக தொலைக்காட்சியில் காட்டப்படும் திரைப்படம் ;

(d) தொலைக்காட்சி நிகழ்ச்சி ;

(e) பொழுதுபோக்குகள் ;

(f) மனமகிழ் கூடம் ;

(g) நேரடி வீட்டு சேவை மூலம் அளிக்கப்படும் கேளிக்கைகள் ;

(h) கிரிக்கெட் விளையாட்டு பிற எந்த விளையாட்டு.

(2) திரைப்படக் காட்சி மீதான கேளிக்கை வரி பின்வரும் வீதங்களில் கணக்கிடப்படும், அவையாவன:—

(a) தொலைகாட்சி கண்காட்சியின் அனுமதிக்கான ஒவ்வொரு செலுத்துகைக்கும் அரங்கம் அமைந்துள்ள,—

(i) மாநகராட்சி மற்றும் சிறப்புநிலை நகராட்சிகளின், எல்லைகளுக்குள் அமைந்திருக்கிற திரையரங்குகள் மற்றும் மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளின் பகுதிகளின் புறப்பரப்பு எல்லைகளுக்கு வெளியிலிருந்து ஐந்து கிலோ மீட்டருக்குள் உள்ள, நிரந்தர அல்லது பகுதிநிரந்தர திரையரங்குகளில் காட்டப்படும் திரைப்படம் எதற்குமான, அனுமதிக்கான செலுத்துகை ஒவ்வொன்றும்,—

(A) புதிய திரைப்படத்திற்கான வரித்தொகை உள்ளடங்கலான அனுமதிக்கான மொத்த செலுத்துகையின் முப்பது விழுக்காடு வீதத்தில்; மற்றும்

(B) பழைய திரைப்படத்திற்கான வரித்தொகை உள்ளடங்கலான அனுமதிக்கான மொத்த செலுத்துகையின் இருபது விழுக்காடு வீதத்தில்;

(ii) (1) ஆம் உட்கூறில் குறித்துரைக்கப்பட்டதல்லாத பிற பகுதிகளில், புதிய அல்லது பழைய திரைப்படத்திற்கான வரித்தொகை உள்ளடங்கலாக அனுமதிக்கான மொத்தச் செலுத்துகையின் இருபது விழுக்காடு வீதத்தில், கணக்கிடப்படுதல் வேண்டும்;

**விளக்கம்** I.— இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, ''மாநகராட்சிகள்'' என்பது, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் அமைத்துருவாக்கப்படும் பிற மாநகராட்சி எதுவும் என்று பொருள்படும்.

**விளக்கம்** II.— இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, ''சிறப்புநிலை நகராட்சி'' என்பது, 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி சிறப்புநிலை நகராட்சியாக வகைப்படுத்தப்பட்ட நகராட்சி என்று பொருள்படும். தமிழ்நாடு சட்டம் V/1920.

(3) குதிரைப்பந்தயம் எதற்குமான அனுமதிக்கான செலுத்துகை ஒவ்வொன்றின் மீதான கேளிக்கைவரி பின்வரும் வீதங்களில் வசூலிக்கப்படுதல் வேண்டும்,

தமிழ்நாடு சட்டம் V/ 1920.

அவையாவன:–அத்தகைய செலுத்துகை (வரித்தொகை உள்ளடங்கலான) வரிவீதம்

| | | |
|---|---|---|
| (i) | முப்பதுகாசுகளுக்கு மேல் இருக்குமிடத்து | ஒவ்வொரு செலுத்துகையின் நான்கில் ஒரு பங்கு |
| (ii) | முப்பது காசுகளுக்குமேல், ஆனால் ஒரு ரூபாய் மற்றும் ஐம்பது காசுக்கு மேற்படாதவிடத்து | அத்தகைய செலுத்துகையின் மூன்றில் ஒருபங்கு |
| (iii) | ஒரு ரூபாய் மற்றும் ஐம்பது காசுக்கு மேல் இருக்கிறவிடத்து | அத்தகைய செலுத்துகையின் ஐந்தில் இரண்டு பங்கு |

தமிழ்நாடு சட்டம் V/ 1920.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

(4) காணொளி சுருள் பேழைப்பதிவு மூலம் அல்லது கம்பி வடத் தொலைக்காட்சி அமைப்பு மூலம் தொலைக்காட்சி திரையில் காட்டப்படும் திரைப்படத்தின் மீதான கேளிக்கைவரி, அனுமதிக்கான ஒவ்வொரு செலுத்துகையின் மீது பின்வரும் வீதங்களில், அவையாவன:–

(a) பழைய திரைப்படத்திற்கான வரித்தொகை உள்ளடங்கலான அனுமதிக்கான மொத்தச் செலுத்துகையின் ஐம்பது விழுக்காடு வீதத்தில்; மற்றும்

(b) புதிய திரைப்படத்திற்கான வரித் தொகை உள்ளடங்கலான அனுமதிக்கான மொத்தச் செலுத்துகையின் அறுபது விழுக்காடு வீதத்தில், கணக்கிடப்படுதல் வேண்டும்.

(5) தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மீதான கேளிக்கைகள் வரி, பின்வரும் வீதங்களில், அவையாவன:–

| | |
|---|---|
| (a) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், தூத்துக்குடி, திருப்பூர், ஈரோடு, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகளின் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் அமைத்துருவாக்கப்படும் பிற மாநகராட்சி எதனின் எல்லைகளுக்குள். | மாதம் ஒன்றுக்கு ஆறு ஆயிரம் ரூபாய் |

| | | |
|---|---|---|
| .(b) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட நகராட்சிகளின் எல்லைகளுக்குள். | மாதம் ஒன்றுக்கு மூன்றாயிரம் ரூபாய். | தமிழ்நாடு சட்டம் V/ 1920. |
| (c) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட பேரூராட்சிகளின் எல்லைகளுக்குள். | மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய். | தமிழ்நாடு சட்டம் V/ 1920. |
| (d) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சிகளின் எல்லைகளுக்குள். | மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய். | தமிழ்நாடு சட்டம் 21/1994. |

(6) பொழுதுபோக்கு மீதான கேளிக்கை வரியானது, பொழுதுபோக்கு நிகழ்ச்சி ஒன்றின் அனுமதிக்கான ஒவ்வொரு செலுத்தத்தின் மீது பத்து விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(7) மனமகிழ்கூடத்துக்குண்டான கேளிக்கை வரியானது மனமகிழ்கூடத்திற்கான ஒவ்வொரு செலுத்தத்தின் மீதும் 20 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(8) செயற்கைகோள் சமிக்கைகள் மூலமாக காண்பிக்கப்படும் எந்தவொரு நிகழ்ச்சி, திரைப்படம் அல்லது ஒளிபரப்பப்படும் பிற நிகழ்ச்சி எதுவும் காட்டுவதற்கான நேரடி வீட்டு சேவை மீது கேளிக்கை வரியானது, நேரடி வீட்டு சேவை ஒன்றை வழங்குவதற்கு, சேவை வழங்குபவரால் பெறப்படும், சேவை வரி நீங்கலான முழு மொத்த கட்டணத்தில் 30 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்பட வேண்டும்.

(9) இந்தியா பிரிமியர் லீகினால், இந்தியாவில் நடத்தப்படும் கிரிக்கெட் விளையாட்டு போட்டி அல்லது கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தால் நடத்தப்படும் சேம்பியன்ஸ் லீக், இருபது 20 கிரிக்கெட் விளையாட்டு போட்டி அல்லது எந்த ஒரு நபராலோ அல்லது நபர்களின் அமைப்பாலோ நடத்தப்படும் பிற விளையாட்டுகள் எதன் மீதும் கேளிக்கை வரியானது, வரித்தொகை உள்ளடக்கலாக அனுமதிக்கான மொத்த செலுத்தத்தில் 25 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

அன்பளிப்பு நுழைவுச் சீட்டு மீதான வரி.

4. வரிவிதிக்கத் தக்க அன்பளிப்பு நுழைவுச் சீட்டு ஒவ்வொன்றின் மீதும் அது எந்த கேளிக்கைக்கான அனுமதிக்காக வழங்கப்பட்டதோ அந்த கேளிக்கைக்கு அத்தகைய வரி விதிக்கத்தக்க அன்பளிப்பு நுழைவுச்சீட்டு வைத்து இருப்பவர் இடம் கொள்ளுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கான இருக்கையின் இடவசதி வகையின்படி முழு செலுத்தமும் செலுத்தப்பட்டு இருப்பது போன்று அந்த கேளிக்கைக்கான அனுமதிக்கு பொருந்தத்தக்கவாரு உரிய வீதத்தில் விதிக்கப்பட்டு உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு செலுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்; மற்றும் இந்தச்சட்டத்தின் மற்றும் 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் நிதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், அத்தகைய வரிவிதிக்கத்தக்க அன்பளிப்பு அனுமதிச் சீட்டை வைத்திருப்பவர் பணம் செலுத்தியதின் பேரில் அனுமதிக்கப்பட்டு இருப்பவராக கொள்ளப்படுவார். தமிழ்நாடு சட்டம் 52/1961.

குதிரை பந்தய அனுமதிக்கான செலுத்தத்தின் மீ த ா ன கூடுதல் மேல் வரி.

5. (1) 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் நிதிச்சட்டத்தின் 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்படும் கேளிக்கை வரித்தொகை மற்றும் கேளிக்கை வரி மீதான மேல்வரி தொகை உள்ளடக்கலான ஒவ்வொரு செலுத்தத்தின் மீதும், குதிரை பந்தயம் எதற்குமான அனுமதிக்கு கூடுதல் மேல்வரி ஒன்று விதிக்கப்பட்டு உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு செலுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்– தமிழ்நாடு சட்டம் 52/1961.

(a) அத்தகைய செலுத்தம் 5 ரூபாய்க்கு மேற்படாதவிடத்து, 50 பைசா; மற்றும்

(b) அத்தகைய செலுத்தம் 5 ரூபாய்க்கு மேற்படும்விடத்து, ஒரு ரூபாய்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், கூடுமானவரை, இந்தச்சட்டத்தின்படி செலுத்தத்தக்க கேளிக்கை வரி தொடர்பாக அவை பொருந்துவது போன்று, இந்த பிரிவின்படி செலுத்தத்தக்க கூடுதல் மேல்வரி தொடர்பாக பொருந்துதல் வேண்டும்.

கேளிக்கைகளுக்கு அனுமதி.

6. (1) இந்தச் சட்டத்தில் பிறவாராக வகை செய்யப்பட்டதற்கு நீங்கலாக, கேளிக்கை இடம் எதனுள்ளும் கடமை எதுவுமோ அல்லது கேளிக்கையுடன் தொடர்புடைய கடமை எதுவுமோ அல்லது இந்தச் சட்டத்தினாலோ அல்லது அதன் வழியாகவோ அல்லது பிற சட்டம் எதன்வழியாகவோ தமக்கு விதிக்கப்பட்ட கடமை எதனையும் புரியவேண்டியவராக இருக்கும் ஒரு நபர் அல்லாத பிற நபர் எவரும்,–

(a) வகுத்துறைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும், வழங்கப்படும் அனுமதிச் சீட்டு ஒன்றுடன்; அல்லது

(b) சிறப்பு நேர்வுகளில், உள்ளாட்சி அமைப்பின் ஒப்புதலுடன் அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையை தானாக இயங்கிபதிவு செய்யும் கம்பிவடம் மூலமாகவோ, இயந்திர

பொறிவாயிலாகவோ பதிவுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையைத் தவிர, கேளிக்கை எதற்கும் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(2). (1)–ஆம் உட்பிரிவின் (b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வு தவிர, கேளிக்கை ஒன்றின் உரிமையாளர் எவரும் குதிரை பந்தயத்திற்கான செலுத்தத்தின் மீது கேளிக்கைவரி மற்றும் வரி மீதான கூடுதல் மேல்வரி செலுத்தத்திற்காக உள்ளாட்சி அமைப்பினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு தொகை வரையிலும் மற்றும் அந்த முறை ஒன்றிலும் அவர் பிணையம் கொடுத்திருந்தால் அன்றி கேளிக்கை நடத்துதல் ஆகாது.

(3). (1)–ஆம் உட்பிரிவிலோ அல்லது (2)–ஆம் உட்பிரிவிலோ உள்ள எதுவும் குதிரை பந்தயத்திற்கு அனுமதிக்கான செலுத்தத்தின்மீது கேளிக்கை வரி மற்றும் வரி மீதான கூடுதல் மேல்வரி செலுத்தத்திற்காக கேளிக்கை ஒன்றின் உரிமையாளரிடம் இருந்து பிணையம் வேண்டுறுத்துவதிலிருந்து உள்ளாட்சி அதிகார அமைப்பினை தடை செய்வதாக கொள்ளப்படுதல் ஆகாது.

வரி செலுத்தும் முறை.

7. (1) கேளிக்கை வரியானது பணம் செலுத்துவதன் பேரில் அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டு இருப்பதாக கொள்ளப்படும் ஒவ்வொரு நபருக்கும் விதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அனுமதிகளின் எண்ணிக்கையின் பேரில் கணக்கிடப்பட்டு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) கேளிக்கை வரியானது உரிமையாளரிடம் இருந்து கொடுபடவேண்டியதும் வசூலிக்கப்பட தக்கதுமானது.

(3) கேளிக்கை ஒன்றுக்கு அனுமதிக்காக நிறுவனம் எதற்கும் செலுத்தும் ஒரு சந்தாவாகவோ அல்லது பங்களிப்பாகவோ அல்லது பருவ நுழைவுச்சீட்டு அல்லது கேளிக்கைகளின் தொடருக்கு அனுமதி உரிமைக்காகவோ அல்லது குறிப்பிட்ட சிலகால அளவிற்கான கேளிக்கை எதற்குமோ செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த தொகைவாயிலாக முழுவதுமாகவோ அல்லது பகுதி அளவிலோ செலுத்தப்படுகிறவிடத்து கேளிக்கை வரியானது ஒட்டுமொத்த தொகையின்மீது செலுத்தப்படுதல் வேண்டும்; ஆனால் ஒட்டுமொத்த தொகை ஒன்றின் செலுத்தமோ அல்லது அனுமதி சீட்டு செலுத்தவோ பிறதனி உரிமைகள், உரிமை அல்லது கேளிக்கை ஒன்றுக்கான அனுமதி தவிர்த்த நோக்கங்களுக்கானதாக செலுத்தத்தை குறிப்பதாக அல்லது வரிவிதிப்பு செயல்பாட்டில் இருந்திராத போது இந்த கால அளவின் போதும் கேளிக்கை ஒன்றுக்கான அனுமதியை அடக்கியிருப்பதாகவோ உள்ளாட்சி அமைப்பு கருதிகிறவிடத்து, வரியானது எந்த கேளிக்கைகள் பொருத்து கேளிக்கைவரி செலுத்தத்தக்கதாக இருக்கிறதோ அந்த கேளிக்கைக்கு அனுமதிக்கான உரிமை குறிப்பதாக உள்ளாட்சி அதிகார அமைப்பிற்கு தோன்றும் அத்தகைய ஒரு தொகையினை விதிக்கப்படுதல் வேண்டும்.

விவர அறிக்கைகள்.

8. (1) கேளிக்கை ஒன்றின் உரிமையாளர்கள் ஒவ்வொருவரும், அனுமதிக்கான செலுத்தல்கள் மற்றும் அனைத்து அன்பளிப்பு நுழைவுச் சீட்டுகள் பொறுத்து அல்லது நேர்வுக்கேற்ப தொலைக் காட்சிக்கான அல்லது பொழுதுபோக்கு அல்லது மனமகிழ்க் கூடம் அல்லது நேரடி வீட்டுச் சேவைக்கான தொகை வசூலிப்பு எதுவாகவிருப்பினும், அத்தகைய விவர அறிக்கைகளை துணை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும், அத்தகைய கால அளவுக்குள்ளும், அத்தகைய அதிகார அமைப்புகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி சமர்ப்பிக்கப்படும் விவர அறிக்கை எதுவும் சரியானதாகவும் முழுமையானதாகவும் இருக்கிறது என்று வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு மனநிறைவடையுமானால், அது அதனடிப்படையில் உரிமையாளரின் வரி மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்கீழ் விவர அறிக்கையை குறிப்பிட்ட காலத்திற்கு சமர்ப்பிக்காமலோ அல்லது சமர்ப்பிக்கப்பட்ட விவர அறிக்கை தவறானதாகவோ அல்லது முழுமையற்றதாகவோ வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்புக்கு தோன்றுமாயின், அது குறித்து அவ்வமைப்பு தேவையென கருதும் விசாரணை செய்த பின்பு, அவ்வதிகார அமைப்புக்கு நியாயம் என தோன்றும் விதத்தில் பிரிவு 3–ன்கீழ் வரி மதிப்பீடு நிர்ணயம் செய்யலாம்.

வரம்புரையாக இவ்வுட்பிரிவின்கீழ் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர், உரிமையாளருக்கு அவர் சமர்ப்பித்த விவர அறிக்கை சரியானதாகவும், முழுமையானதாகவும் உள்ளது அல்லது விவர அறிக்கை நிலுவையில் இல்லை என்று நிரூபிப்பதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

தவறுதலாக விடுபட்ட செலுத்துகை மீது மதிப்பீடு செய்தல்.

9. (1) காரணம் எதற்காகவும் கேளிக்கை எதற்கும் அனுமதிக்கான செலுத்தம் எதுவும், அல்லது வசூலிக்கப்பட்ட தொகை எதுவும் 3 ஆம் பிரிவின்படி வரிமதிப்பீட்டிற்கு தப்பியிருக்கிறவிடத்து, 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, (3) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் கால அளவிற்குள் எச்சமயத்திலும், தாம் தேவையெனக் கருதுகிற விசாரணையை செய்த பின்பு, அத்தகைய வரிக்கணிப்பிற்கு எதிராக காரணம் காட்டுவதற்கு உரிமையாளருக்கு நியாயமான வாய்ப்பு ஒன்று அளித்த பின்பும், 3 ஆம் பிரிவின்படி அத்தகைய செலுத்தத்தின் மீது கொடுபடவேண்டிய வரியினை தம் முழு நிதானிப்போடு வரி மதிப்பீடு கணிப்பு செய்யலாம்.

(2) காரணம் எதற்காகவும் கேளிக்கை எதற்கும், அனுமதிக்கான செலுத்தம் எதுவும், 3ஆம் பிரிவின்படி எந்த வீதத்தில் அளிக்கப்படவேண்டுமோ அந்த வீதத்தைவிட குறைவான ஒரு வீதத்தில் மதிப்பிடப்பட்டு இருக்கிறவிடத்து, 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, (3) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவிற்குள் எச்சமயத்திலும், 3 ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட அத்தகைய செலுத்தத்தின் மீது கொடுபடவேண்டிய வரியினை தான் தேவையெனக் கருதலாகும் விசாரணையைச் செய்த பின்பும், அத்தகைய மறு வரிமதிப்பீட்டிற்கு எதிராக காரணம் காட்டுவதற்கு பொருத்தமான வாய்ப்புகள் அளித்த பின்பும், கொடுபடவேண்டிய வரி மறுமதிப்பீடு செய்யலாம்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது நேர்வுக்கேற்ப, (2) ஆம் உட்பிரிவின்படியோ வரிமதிப்பீடோ அல்லது மறு வரிமதிப்பீடோ செய்கையில், 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, உரிமையாளரால் வேண்டுமென்றே திரித்து கூறியதன் அல்லது பொருண்மைகளை மறைத்ததன் காரணமாக, வரிவிதிக்கப்படாமலோ அல்லது வரிவிதிக்கத்தக்க வீதத்திற்கு குறைவான ஒரு வீதத்தில் வரி விதிக்கப்பட்டு இருக்கிறது என்றோ தெளிவுறக் காணுமாயின், (1) ஆம் உட்பிரிவின் படியோ, அல்லது நேர்வுக்கேற்க, (2) ஆம் உட்பிரிவின்படியோ, மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்ட வரிக்கு கூடுதலாக தண்டம் என்ற முறையில்,–

(a) விபர அறிக்கையின்படி செலுத்தப்பட்ட வரியானது, மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்டதைவிட பத்து விழுக்காட்டிற்கு மேல் குறைவாக இருக்குமானால், மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்ட வரியில் ஐம்பது விழுக்காடு.

(b) விவர அறிக்கையின்படி செலுத்தப்பட்ட வரியானது, மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்ட வரிக்கு பத்து விழுக்காட்டிற்கு மேல் ஆனால் ஐம்பது விழுக்காட்டிற்கு மேற்படாமல், குறைவாக இருக்குமானால் மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்ட வரியில் நூறு விழுக்காடு.

(c) விவர அறிக்கையின்படி செலுத்தப்பட்ட வரியானது, மதிப்பீடு செய்யப்பட்ட அல்லது மறு மதிப்பீடு செய்யப்பட்ட வரியில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல், குறைவாக இருக்குமானால், நூற்று ஐம்பது விழுக்காடு பணத்தொகை ஒன்றை தண்டம் என்ற முறையில் செலுத்துமாறு உரிமையாளரைப் பணிக்கலாம்:

வரம்புரையாக இந்த உட்பிரிவின்படி, பாதிக்கப்பட்ட உரிமையாளருக்கு தண்டம் விதிப்பதற்கு எதிராக காரணம் காட்டுவதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி, இந்த உட்பிரிவின்படி தண்டம் எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது.

(4). (1) ஆம் உட்பிரிவிலோ அல்லது (2) ஆம் உட்பிரிவிலோ அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது, நேர்வுக்கேற்ப, (2) ஆம் உட்பிரிவின்படியோ, வரிமதிப்பீடு அல்லது மறு வரிமதிப்பீடு ஒன்றை செய்கையில் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது நிதியாண்டு ஒன்றை அல்லது அதன் பகுதி எதனையும் பொறுத்து ஒற்றை ஆணை பிறப்பிக்கலாம்.

(5). மூலவரிமதிப்பீட்டு ஆணை எதுவும் மேல்முறையீடு ஒன்றின் பொருளாக இருந்திருப்பினும் (1) ஆம் உட்பிரிவின்படியான அல்லது (2) ஆம் உட்பிரிவின்படியான அதிகாரங்கள், 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியான வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பினால் செலுத்தப்படலாம்.

(6) இந்தப் பிரிவின்படியான வரிமதிப்பீடு அல்லது மறு வரிமதிப்பீடு செய்வதற்கான கால வரம்பினை கணக்கிடுகையில், வரிமதிப்பீடு அல்லது மறு வரிமதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் உரிமையியல் நீதிமன்றத்தின் அல்லது பிற தகுதிறமுள்ள அதிகார அமைப்பின் ஆணைகளின் படி நிறுத்திவைக்கப்பட்டு இருந்தால் அந்த கால அளவானது நீக்கப்படுதல் வேண்டும்.

சட்டப்பூர்வ பிரதிநிதிகளின் மதிப்பீடுகள்.

10. உரிமையாளர் ஒருவர் இறந்துவிடுகிறவிடத்து, அவருடைய நிறைவேற்றுநர், நிர்வாக அல்லது பிற சட்டமுறையிலானபிரதிநிதி இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக உரிமையாளராக கொள்ளப்படுவார், மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மேற்சொன்ன இறந்துபோன உரிமையாளரால் நடத்தப்பட்ட கேளிக்கைகள் பொருத்து அவருக்கு பொருந்துதல் வேண்டும்.

வரம்புரையாக அத்தகைய உரிமையாளர் எவராலும் செலுத்தத்தக்கதாக மதிப்பிடப்பட்ட வரி, தண்டம் அல்லது பிற தொகை எதன்பொருட்டும் அவர் இறந்துபோகாமல் இருந்திருப்பாரேயானால் இந்தச்சட்டத்தின்படி அவரால் செலுத்தக்கதாக இருந்திருக்க கூடிய வரி அல்லது தண்டம் அல்லது பிற தொகை எதனையும் பொருட்டு, நிறைவேற்றுநர், நிர்வாகி அல்லது பிற சட்டமுறைபிரதிநிதி தன் பொறுப்பில் உள்ளவையான இறந்துபோனவரின் சொத்திருப்புகளின் அளவிற்கு மட்டுமே கடப்பாடு உடையவர் ஆவார்.

வரி விதிவிலக்கு அளிப்பதற்கான அல்லது குறைப்பதற்கான அதிகாரம்.

11. (1) அரசு, மன்றத்தின் தீர்மானத்தின் பேரில், அவர்கள் பொருத்தமென கொள்கிற அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் வழி, இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க கேளிக்கைகளுக்கான வரி கடப்பாட்டிலிருந்து கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகை எதற்கும் விதி விலக்களிக்கலாம்.

(2) அரசு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய சூழ்நிலையில் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மன்றத்தின் தீர்மானத்தின் பேரில், ஆணையின் வழி,–

(i) அத்தகைய வரி செலுத்துவதற்கு கடப்பாடு உடைய உரிமையாளர் எவரையும் அல்லது உரிமையார்ளகளின் வகையினர் எவராலும் அல்லது நபர் எவராலும் அல்லது நபர்களின் வகையினர் எவராலும் கேளிக்கை எதனையும் அல்லது கேளிக்கைகளின் வகை எதனையும் பொறுத்து இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க கேளிக்கை வரி முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ முன்னிறு தேதியிலோ அல்லது பின்னிறு தேதியிலோ குறைக்கலாம்; மற்றும்

(ii) அத்தகைய ஆணையை ரத்து செய்யலாம் அல்லது மாற்றி அமைக்கலாம்.

வரி எய்த பெறும் முறை மற்றும் பிற கேட்புகளுக்கு மேல் முன்னுரிமையாக நிலுவை வரி.

12. (1)–3–ஆம் பிரிவின்படி வரி என்ற முறையில் கொடுபட வேண்டிய தொகை எதுவும், பிற வசூலிக்கும் முறை எதற்கும் குந்தகமின்றி,–

(a) அது ஒரு நில வருவாய் நிலுவையில் இருந்தார்போன்று; அல்லது

(b) குற்றவியல் நடுவர் எவருக்கும் விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய குற்றவியல் நடுவரால் விதிக்கப்பட்ட அபராதம் ஒன்றாக இருந்தார்போன்று அத்தைய குற்றவியல் நடுவரால், எய்தப்பெறுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின் வகை முறைகளுக்கு குந்தகமின்றியும், அப்போதைக்கு சொல்லாற்றலில் உள்ள பிறசட்டம் எதனிலும் அடங்கிவுள்ள எது எவ்வாறு இருப்பினும், உரிமையாளர் மீது மதிப்பிடப்பட்ட வரி எதுவும், அல்லது அவரிடம் இருந்து இந்தச் சட்டத்தின்படி கொடுபட வேண்டிய பிற தொகை எதுவும், நில வருவாய் பொருத்து அரசின் கோருரிமைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன உரிமையாளரின் சொத்திற்கு எதிரான பிற கோரிக்கைகள் அனைத்தின் மீதும் முன்னுரிமையுடையது ஆகும்.

வருவாய் வசூலிப்பு சட்டத்தின்படி வகுத்துறைக் கப்பட்ட அதிகார அமைப்பிற் குள்ள சிறப்பு அதிகாரம்.

தமிழ்நாடு சட்டம் II / 1864.

13. (1) 8–ஆம் பிரிவின் (1)–ம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது இந்தச் சட்டத்தின்படி கொடுபடவேண்டிய தொகை எதனையும் எய்தப்பெறும் நோக்கத்திற்காக 1864–ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலிப்புச் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் ஒருவருக்குள்ள அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் VII / 1839.

(2) (3)ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு மேற்சொன்ன அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி கொடுபட வேண்டிய தொகை எதனையும் எய்தப்பெறும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின்படி கொடுபட வேண்டிய தொகை எதற்காகவும் பற்றுகை செய்யப்பட்ட சொத்தினை விற்பனை செய்வதற்கான 1839–ஆம் ஆண்டு தமிழ்நாடு வாடகை மற்றும் வருவாய் விற்பனைகள் சட்டத்தின்படி ஆணையருக்குள்ள அதிகாரமுறை கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் VII / 1839.

(3) 1839 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாடகை மற்றும் வருவாய் விற்பனைகள் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், மேற்சொன்ன அதிகார அமைப்பு (2) ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட அதிகாரங்களை செலுத்துகையில் அவருடைய மேல் அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு இருத்தல் வேண்டும்.

தண்டத்தை வசூலித்தல்.

14. இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க தண்டம் எதுவும் வசூலிப்பு மற்றும் எய்தப் பெறும் நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தின்படியான வரியாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி குற்றச் செயல் ஒன்றுக்கான, அல்லது இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படாமல் இருக்கும் முழுத் தொகையும் எய்தப் பெறுவதற்கான நடவடிக்கை எதுவும் தொடங்கப்படுவதற்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

பிரிவினையான குடும்பம், கலைக்கப்பட்ட நிறுவனம் முதலான வற்றின் வரி செலுத்தக் கடப்பாடு.

15. உரிமையாளர் ஒருவர் ஓர் இந்து கூட்டுக்குடும்பமாகவோ, நிறுவனமாகவோ அல்லது பிறநபர்களின் குழாமாகவோ இருந்து அத்தகைய குடும்பம், நிறுவனங்கள் அல்லது குழாம், பிரிவினையோ அல்லது நேர்வுக்கேற்ப கலைக்கப்படவோ செய்யப்படுகிறவிடத்து,–

(a) அத்தகைய பிரிவினை அல்லது கலைப்பின் தேதி வரையிலான கால அளவிற்கு அத்தகைய குடும்பம், நிறுவனம் அல்லது குழாமினால் இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க வரியானது அத்தகைய பிரிவினையோ அல்லது கலைப்போ நிகழாது இருந்தார்போன்று வரி விதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படியே இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அனைத்தும் பொருந்துவதாகும்; மற்றும்

(b) அத்தகைய பிரிவினை அல்லது கலைப்பு சமயத்தில், இந்து கூட்டுக்குடும்பத்தின், நிறுவனத்தின் அல்லது நபர்களின் குழாமின் ஓர் உறுப்பினராகவோ அல்லது கூட்டாளியாகவோ இருந்த ஒவ்வொரு நபரும் மற்றும் இறந்துபோன அத்தகைய நபர்கள் எவரின் சட்டமுறையிலானபிரதிநிதியும், அத்தகைய பிரிவினை கலைப்பு இருந்த போதிலும் அத்தகைய குடும்பம் நிறுவனம் அல்லது நபர்களின் குழாமினால் இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க வரி, தண்டம் அல்லது பிற தொகையை வரிவிதிப்பானது அத்தகைய பிரிவினை கலைப்பிற்கு முன்னரோ

அல்லது பின்னரோ மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் அத்தகைய செலுத்தத்திற்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் கடப்பாடு உடையவர் ஆவார்.

காலதாமதமான செலுத்துகை மீதான வட்டி.

**16.** வரி மதிப்பிடப்பட்டது அல்லது இந்தப் பிரிவின்படி செலுத்தக்கூடிய வரி அல்லது அதனுடைய தவணை முறை எதனையும் உரிமையாளர் எவராலும் செலுத்தாமல் இருப்பினும் அல்லது வரிவிதிப்பு அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் எவரிடமிருந்து உரிய அத்தகைய வரி பெறப்பட வேண்டுமோ, அந்த உரிமையாளர் அல்லது அத்தகைய வரி செலுத்தத்திற்கு கடப்பாடுடைய நபர் வட்டியின் மூலம், நிலுவைத் தொகையுடன், அதன் செலுத்தத்திற்காக குறித்துரைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் ஒவ்வொருமாதம் அல்லது அதனுடைய பகுதியாக அத்தகைய தொகையில் இரண்டு சதவீத வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகைக்கு சமமான ஒரு தொகை செலுத்தப்படவேண்டும்:

வரம்புரையாக ஆனால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அல்லது நூறுரூபாய்க்கு குறையாத இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படவேண்டிய வரி எதற்கும், வரிவிதிப்பு அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட கால அளவு முடிவுற்ற பின்னர் ஒருமாத கால அளவிற்கு வட்டி விதித்தல் ஆகாது.

மேலும் வரம்புரையாக, இந்தப் பிரிவின்படி மதிப்பீட்டு ஆணை எதற்கும் எதிரான மேல்முறையீடு ஒன்று கொணரப்பட்டு இருந்த உரிமையாளர் அல்லது நபர் ஒருவர் இந்தப்பிரிவின்படி செலுத்தப்படவேண்டிய வட்டி, மேல்முறையீட்டில் பிரச்சனையின் தொகையை பொறுத்து மேல்முறையீட்டினை முடிவு செய்கின்ற வரையில் தள்ளிவைக்கப்பட வேண்டும்; மற்றும் அந்த மேல்முறையீட்டின் பொருளாக இருந்த அத்தகைய தொகையில் மேல்முறையீட்டின் பேரில் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணைக்கு இணங்க நிலுவையில் இருக்கின்ற தொகையின் பேரில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

ஆய்வு.

**17.** (1) இதன்பொருட்டு, உள்ளாட்சி அமைப்புகளால் ஆய்வு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், கேளிக்கை நடைபெறுகின்ற போது கேளிக்கை இடம் எதிலும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களிடத்தோ அல்லது வேண்டுறுத்தல்களுக்கு ஏற்ப நடப்பதற்கோ அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதனையும் காண்கின்ற நோக்கத்திற்காக தகுமான நேரம் எதிலும் கேளிக்கை இடமாக சாதாரணமாக பயன்படுத்தப்பட்ட இடம் எதிலும் நுழையலாம்.

(2) கேளிக்கை இடம் ஒவ்வொன்றின் உரிமையாளர் அல்லது சொந்தக்காரர் அல்லது கேளிக்கை இடமாக சாதாரணமாக பயன்படுத்தப்பட்ட இடம் எதனையும் பொறுப்பில் கொண்டுள்ள நபர் எவரும் (1)–ஆம் உட்பிரிவின்படி அவரின் கடமைகளை நிறைவேற்றும்போது ஆய்வு அலுவலருக்கு தகுமான உதவி ஒவ்வொன்றையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஆய்வு அலுவலர் நுழைவதை தடுக்கின்ற அல்லது தடங்கல் செய்கின்ற நபர் எவரையும், அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதனின்படியும் எந்த தண்டனைக்கு அவர் கடப்பாடு உடையவராக இருக்கிறாரோ அந்த தண்டனை எதற்கும் கூடுதலாக, ஐநூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டம் விதித்து அவர் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் மற்றும் 21–ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, தொலைக்காட்சி நிகழ்ச்சி தொடர்பான கேளிக்கை இடம் என்பது அத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டிருந்த அந்த இடமாக பொருள்கொள்ளப்படும்.

அனுமதிக்கான செலுத்துகை யிலிருந்து விலக்களிப்பு.

**18.** 17–ஆம் பிரிவில் சுட்டப்பட்ட அலுவலர் அல்லது இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ அல்லது பிற சட்டம் எதினினாலும் அவரின்பேரில் விதிக்கப்பட்ட கடமையையொட்டி கேளிக்கை இடம் எதிலும் நுழையும் பிற அலுவலர் எவரும் கேளிக்கைக்கு அனுமதித்தலுக்காக அவர் செலுத்துவதற்கு வேண்டுதல் ஆகாது.

நுழைதல், ஆய்வுசெய்தல் மற்றும் கைப்பற்று தலுக்கான அதிகாரம்.

**19.** (1) இந்தச் சட்டப் பிரிவுகளின்கீழ் அல்லது இதன்படி உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட துணைவிதிகளின் வகைமுறைகளுக்கு முரணாக உள்ளதாக ஐயம் கொள்ளுவதற்கு தகுமான காரணம் இருப்பதாக கருதும் இதன்பொருட்டு உள்ளாட்சி அமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவராலும், புத்தகங்கள், பதிவுருக்கல், கணக்குபுத்தகங்கள், பதிவேடுகள், பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத சீட்டுகள் மற்றும் அதனுடைய பாகம் அல்லது கேளிக்கை ஒன்றின் உரிமையாளரால் வைத்துவரப்பட்டு அல்லது ஐயத்திற்குரியவற்றை வைத்துவரப்படும் அதனுடைய தொடர்புடைய பிறபொருட்கள் எதனையும் எழுத்து மூலமாக காரணத்தை பதிவு செய்தபின்னர், வளாகங்கள் எதிலும் தகுமான நேரங்கள் எல்லாம் நுழைந்து கைப்பற்றலாம் மற்றும் அத்தகைய புத்தகங்கள், பதிவுருக்கள், கணக்குகள், பதிவேடுகள், பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத சீட்டுகள் மற்றும் அதன் பகுதிகள் அல்லது அதனுடன் தொடர்புடைய பிற பொருட்கள் எதனையும் உரிமையாளர் அல்லது வளாகங்களை பொறுப்பில் கொண்டுள்ள நபருக்கு, அதன் பற்றுச்சீட்டு வழங்குதல் வேண்டும். புத்தகங்கள், பதிவுருக்கள், கணக்குகள், பதிவேடுகள், சீட்டுகள் மற்றும் அதனுடைய பாகங்கள் அல்லது அவ்வாறு பற்றுகை செய்யப்பட்ட பிற பொருட்கள் எதனையும் புலனாய்வின் நோக்கத்திற்காக தேவை என்ற நிலை இருக்கும் வரைக்காக மட்டுமே அத்தகைய அலுவலரால் விடாது வைத்திருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய அலுவலர், எவராலும் நுழைய, சோதனையிட, அல்லது கைப்பற்றுகை செய்ய தடுக்கிற அல்லது தடங்கள் செய்கிற நபர் எவரும், அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள சட்டம் எதனின் படியும் எந்த தண்டனைக்கு அவர் கடப்பாடு உடையவராக இருக்கிறாரோ அந்த

தண்டனை எதற்கும் கூடுதலாக ஐநூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டம் விதித்து அவர் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மத்திய சட்டம் V/1908.

**20.** **(1).** இந்தச் சட்டத்தின்படி வரி விதிப்பதற்கு தகுதிறமுள்ள அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு எதுவும் இந்தச்சட்டத்தின் நோக்கங்களுக்காக **1908**–ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டத்தினால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருக்கும்–

(a) நபர் எவரையும் முன்னிலையாகுமாறு கட்டாயப்படுத்துதல்; மற்றும்

(b) ஆவணம் எதனையும் முன்னிலைப்படுத்துமாறு வற்புறுத்துதல்ஆகிய நோக்கத்திற்கு

**(2)** **(1)**–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அதிகார அமைப்பு இந்தச் சட்டத்தின்படி வரி மதிப்பீடு செய்யவும் (விதிக்கும் மற்றும் வசூலிக்கும்) நோக்கத்திற்காக நபர் எவரிடமிருந்தும் கோரலாகும் தகவல், விவரங்கள், பதிவுறுக்கள் ஆகிய அனைத்தையும் கோருவதற்கு அதிகாரம் உடையதாகும்.

கேளிக்கை இடம் ஒன்றின் மேலாளர் அல்லது பொறுப்பாளர் ஆகியோர் வகுத்துரைக் கப்பட்ட அதிகார அமைப்பு முன்பு முன்னி லையாதல்.

**21.** வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு எதன் முன்பும் முன்னிலையாக வேண்டும் எனக் கருதுகிற நபர் எவரும் மற்றும் மேலாளராக செயல்படுபவர் அல்லது கேளிக்கை இடம் எதனையும் பொறுப்பில் கொண்டு செயல்படுகிற நபர் எவரும், கேளிக்கை எதனின் உரிமையாளரால், கூட்டாளியால் அல்லது கேளிக்கை உரிமம் கொண்டிருப்பரால், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும், முறையிலும் உரியவாறு அதிகாரம் அளிக்கப்படுதல் வேண்டும்.

வரியை அடுத்த ரூபாய்க்கு முழுமை யாக்குதல், பிறவகை.

**22.** வரி, வட்டி, அபராதம், தண்டத்தொகை அல்லது செலுத்தப்பட வேண்டிய பிறதொகை எதுவும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி திருப்பிக் கொடுக்கப்படும் தொகை அல்லது கொடுபடவேண்டிய பிற தொகை எதுவும், இந்த சட்டவகை முறைகளின்படி, அடுத்துள்ள ரூபாய்க்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும் மற்றும் இந்த நோக்கத்திற்காக அத்தகைய தொகை ரூபாயின் பகுதியான காசாக இருக்குமிடத்து அப்போது அத்தகைய பகுதி ஐம்பது காசாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்குமானால் அதை ஒரு ரூபாய்க்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய பகுதி ஐம்பது காசுக்கு குறைவாக இருக்குமானால் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

அபராதங்கள்.

**23.** **(1)** (a) கேளிக்கை இடத்தின் உரிமையாளர் அல்லது கேளிக்கை இடம் எதிலும் அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் எவரும், **6**ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு முரணாக கேளிக்கை இடம் எதிலும் நபர் எவரையும் அனுமதித்தால்; அல்லது

(b) கேளிக்கை எதனின் உரிமையாளர்–

(i) இந்தச்சட்டத்தின்படி கொடுபடவேண்டிய வரிசெலுத்துகை மோசடியாக ஏய்ப்பாரானால்; அல்லது

(ii) இந்தச் சட்டத்தின் வகை முறைகளை மீறுவாரேயானால்;

தமிழ்நாடு சட்டம் IX/1955.

(c) கேளிக்கை இடம் எதினின் உரிமையாளர் அல்லது அவரால் பணியமர்த்தப்பட்ட நபர் எவரும், **1955**–ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படியும் அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளின்படியும் உரிமம் வழங்கும் அதிகாரியால் வகுத்துரைக்கப்பட்ட தொகைக்கு மிகையாக அனுமதி தொகை வசூலிப்பாரானால்,–

குற்றவியல் நடுவரால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில்,–

(i) (a) கூறின்படி அல்லது (b) கூறின் (ii)–ஆம் உட்கூறில் அல்லது (c) கூறின் கீழ்வரும் அத்தகைய குற்றம் ஒவ்வொன்றையும் பொறுத்து ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதத்திற்கு உள்ளாவது;

(ii) (b) கூறின் (i)–ஆம் உட்கூறின் கீழ்வரும் அத்தகைய குற்றம் ஓராண்டு கால அளவு வரை நீட்டிக்கலாகும் சிறைதண்டனை வகைகள் மற்றும் அபராதமும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மத்திய சட்டம் 2 / 1973.

**(2)** **1973**–ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் **(1)**–ஆம் உட்பிரிவின் (b) கூறின் (i)–ஆம் உட்கூறின் கீழ்வரும் குற்றம் கைது செய்வதற்குரியதாகும்.

**(3)** நீதிமன்றம் எதுவும் **(1)**–ஆம் உட்பிரிவின் (b) கூறின் (i) உட்கூறின் கீழ் வரும் குற்றம் ஒன்றை இதன்பொருட்டு உள்ளாட்சி அமைப்பால் பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் எழுத்துவடிவில் செய்யப்பட்ட முறையீட்டின்பேரில் அன்றி, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

(4) நபர் எவரும், நுழைவுச்சீட்டு அல்லது அனுமதி சீட்டு இல்லாமல் கேளிக்கை இடம் எதிலும் காணப்படுகிறவிடத்து, கேளிக்கை இடத்தின் உரிமையாளர் அல்லது பணிக்கு அமர்த்தப்பட்ட நபர், உரிமையாளரின் அல்லது அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபருக்கு தெரியாமல் அல்லது அவரின் மறைமுக ஆதரவு இல்லாமல் அந்த நபர் அனுமதி சீட்டு இல்லாமல் நுழைந்திருக்கிறார் என்று, உரிமையாளார் அல்லது அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் மெய்ப்பித்தால் அன்றி, 6–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு முரணாக அந்த நபர் அனுமதிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுவார்.

நுழைவுச்சீட்டு அல்லது அனுமதி சீட்டு இல்லாமைக்கான அபராதம்.

24. கேளிக்கை இடம் எதிலும், நுழைவுச்சீட்டு, அல்லது அனுமதி சீட்டு இல்லாமல் காணப்படும் நபர் எவரும், உரிமையாளரின் அல்லது அவரால் பணிக்கு அமர்த்தப்பட்ட நபர் எவருக்கும் தெரிந்தோ மறைமுக ஆதரவுடனோ அத்தகைய இடத்தில் அவர் நுழைந்தார் என்று அவர் மெய்ப்பித்தால் அன்றி, குற்றவியல் நடுவரால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பேரில், நூறு ரூபாய்வரை நீடிக்கலாகும் அபராதத்திற்கு உள்ளாவார்.

குற்றம் செய்ய உடந்தையாக இருந்தமைக்கான அபராதம்.

25. இந்தச் சட்டத்தின்படியாக குற்றம் எதனையும் செய்வதற்கு உடந்தையாய் இருக்கிற எவராயினும் அந்தக் குற்றத்திற்காக வகை செய்துள்ள தண்டனை விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்.

26. (1) இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஒன்று, ஒரு நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தக் குற்றம் செய்யப்பட்ட காலத்தில் அந்த நிறுமத்தின் அலுவலை நடத்திவருவதற்கு அந்த நிறுமத்தின் பொறுப்பைக் கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும் அதோடு, அந்த நிறுமமும், அந்த குற்றச் செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

வரம்புரையாக அந்தக் குற்றச் செயலானது, தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதாக அல்லது அத்தகைய குற்றச்செயல் செய்வதைத் தடுப்பதற்கு தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டதாக அத்தகைய நபர் மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)–இல் அடங்கியுள்ள எது எவ்வாறாயிருப்பினும், இந்தச்சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரின் இசைவுடனோ மறைமுக ஆதரவுடனோ அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச் செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதலும் அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்.–**இப்பிரிவின் நோக்கங்களுக்காக.–

(a) ''நிறுமம்'' என்பது, கூட்டுநிறுமம் என்று பொருள்படும் மற்றும் ஒரு நிறுவனத்தை, அல்லது தனி நபர்களின் பிற கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

(b) ''இயக்குநர்'' தொடர்பாக

(i) நிறுவனம் என்பது நிறுவனத்தில் உள்ள கூட்டாளி என்று பொருள்படும்.

(ii) சங்கம், அறக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம் என்பது சங்கத்தின், அறக்கட்டளையின் அல்லது பிற கழகத்தின் விதிகளின்படி சங்கத்தின், பொறுப்புக் கட்டளையின் அல்லது நேர்விற்கேற்ப பிற கழகத்தின் மேலாண்மையை ஒப்படைக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் என்று பொருள்படும்.

குற்றங்களை இணக்கமாக தீர்த்துக் கொள்வதற்கான அதிகாரம்.

27. (1) இந்தச்சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு எதிரான கூட்டாக குற்றம் ஒன்றை, செய்துள்ள அல்லது செய்திருப்பதாக நியாயமாக ஐயப்படுகிற எவறொருவரிடமிருந்தும் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு தண்டத் தொகை எதனையும் பெறலாம்–

(a) இந்தச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க வரி எதனின் ஏய்ப்பு குற்றத்தை செய்கிறவிடத்து அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய வரிக்கு கூடுதலாக ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத அல்லது செலுத்தத்தக்க வரித்தொகையின் மூன்று மடங்கு தொகை இதில் எது அதிகமோ அது; மற்றும்

(b) பிறநேர்வுகளில், ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகை அத்தகைய குற்றத்தை இணைக்கமாக தீர்த்துக் கொள்ளுவதற்கான வழிவகைகளை வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு ஏற்றுக் கொள்ளலாம்.

28. (1) இந்தச் சட்டத்தின்படி வரி மதிப்பீடு செய்வதற்கு தகுதிறமுள்ள அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு எதுவும் எந்த நேரத்திலும் அதனால் ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பதிவுருவை பார்த்த மாத்திரத்திலேயே தோன்றும் பிழை எதனையும் திருத்தி அமைக்கலாம்: பதிவுருமை பார்த்த மாத்திரத்திலேயே தோன்றும் பிழை எதனையும் திருத்தியமைப்பதற்கான அதிகாரம்.

வரம்புரையாக அத்தகைய திருத்தி அமைத்தல் எதுவும், அத்கைய அதிகார அமைப்பு, உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்தாலன்றியும் அவ்வாறு கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பு அவருக்கு அளிக்கப்பட்டாலன்றியும் வரிவிதிப்பு, அல்லது தண்டனை எதனையும், அதிகரித்தல் ஆகாது.

(2) அத்தகைய திருத்தியமைத்தலானது, வரிவிதிப்பை, அல்லது தண்டத்தை குறைக்கும் விளைவை கொண்டதாக இருக்கும் இடத்து இந்தச் சட்டத்தின்படி வரிவிதிப்பதற்கு தகுதியுள்ள அதிகார அமைப்பால் உரிமையாளருக்கு கொடுபடவேண்டியதாகும் தொகையை திருப்பி கொடுத்தல் வேண்டும்.

(3) அத்தகைய திருத்தி அமைத்தல், எதுவும் வரிமதிப்பீட்டை அல்லது தண்டத்தை அதிகரிக்கும் விளைவாக இருக்கிறவிடத்து இந்தச் சட்டத்தின்படி வரிவிதிப்பு செய்வதற்கான தகுதிறம் வாய்ந்த அதிகார அமைப்பானது கேளிக்கை இடத்தின் உரிமையாளருக்கு வரிவிதிப்பதற்கான திருத்திய அறிவிப்பை வழங்குதல் வேண்டும் அதன்பேரில் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகளானது முதல் நிகழ்வில் அத்தகைய அறிவிப்பானது வழங்கப்பட்டது போன்றே பொருந்துதல் வேண்டும்.

29. வரியை (தண்டம், கட்டணம் மற்றும் வட்டி உள்ளடங்கலாக) செலுத்துவது தொடர்பாக உள்ளாட்சி அமைப்பின் ஆணை அல்லது முடிவினால் குறையுள்ள கோரிக்கை இடத்தின் உரிமையாளர், அல்லது நபர் எவரும் வகுத்துரைக்கலாகும் அத்தகைய காலத்திற்குள்,– மேல்முறையீடுகள்

(i) மாநகராட்சிகளின் ஆணையினால் அல்லது முடிவினால் அவர் குறையுற்றுயிருப்பாரேயானால் அவர் வரிமேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு;

(ii) அவர் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையினால் அல்லது முடிவினால் குறையுற்றுயிருப்பாரேயானால் வரிமேல்முறையீட்டுக் குழுவிற்கு; அல்லது

(iii) அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையினால் அல்லது முடிவினால் குறையுற்றுயிருப்பாரேயானால் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 83–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டு அமர்த்தப்பட்ட நிருவாக அதிகார அமைப்பிற்கு, மேல்முறையீடு செய்யலாம். தமிழ்நாடு சட்டம் 21/1994.

30. இந்தச்சட்டத்தின்படி செயற்பணிகளை ஆற்றுகின்ற அனைத்து நபர்களையும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது பணியாளர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மத்திய சட்டம் XLV/1860. பொதுப்பணியாளர்களாகக் கருதப்படுதல்.

31. இந்தச்சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி அல்லது துணை விதிகளின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது நல்லெண்ணத்தில் செய்யக் கருதப்பட்ட இந்தச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ, குற்றவழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கைகளையோ தொடருதல் ஆகாது. நல்லெண்ணத்தின்படி மேற்கொள்ளப்படும் செயல்களுக்கான பாதுகாப்பு.

32. (1) இந்தச்சட்டத்தின் வகை முறைகளை செயல்முறைப்படுத்துவதில் இடர்பாடு எதுவும் எழுமானால், அரசானது தமிழ்நாடு அரசிதழில் பொதுவான அல்லது சிறப்பு ஆணையினால் வெளியிடுவதன் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாக இல்லாத, தேவையான அல்லது உகந்தவாறான அத்தகைய வகை முறைகளை, கூறப்பட்ட இடர்பாட்டினை நீக்கும் நோக்கத்திற்காக இயற்றலாம்:

வரம்புரையாக அத்தகைய ஆணையானது, இந்தச்சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த பின்பு இயற்றப்பட்டுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி இயற்றப்பட்ட ஆணை ஒவ்வொன்றையும் அது இயற்றப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

33. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும்அல்லது எதையும் நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு அரசிதழில் அறிக்கையின் வாயிலாக விதிகளை இயற்றலாம். விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகள் அனைத்தையும், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடுதல் வேண்டும். அந்த விதிகள் குறிப்பிட்ட தேதியில் நடைமுறைக்கு வருவதற்கு தெளிவாக குறிப்பிட்டிருந்தாலன்றி அந்தவிதிகள் அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும் குறிப்பிட்ட தேதியில் அவைகள் நடைமுறைக்கு வருவதாக தெளிவாக குறிப்பிட்டிருந்தாலன்றி அவைகள் வெளியிடப்பட்ட அந்த தேதியில் நடைமுறைக்கு வரும்.

**(3)** இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றையும் கூடியவிரைவில் அது இயற்றப்பட்ட பின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றமானது அத்தகைய விதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றமைவு எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றமானது விதி அல்லது அறிவிக்கையை இயற்றுதலோ அல்லது பிறப்பித்தலோ ஆகாதென முடிவுசெய்யுமானால் அதன்பின்பு அவ்விதி அல்லது அவ்வறிவிக்கையானது அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும். அல்லது நேர்விற்கேற்ப செல்திறம் இல்லாது போகும், எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தொழிவு எதுவும் அந்த விதியின்படி அல்லது அறிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந் தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

துணை விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்.

**34. (1)** உள்ளாட்சி அதிகார அமைப்பானது இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு செயல் வடிவம் அளிக்கும் நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படி இயற்றப்பட்ட விதிகளுக்கு முரணாக இன்றி துணை விதிகளை இயற்றலாம்.

**(2)** குறிப்பாகவும் முன்னர் உள்ள பொதுவான அதிகாரத்திற்கு குந்தகமின்றி அத்தகைய துணை விதிகளானது–

(a) அனுமதிக்கான நுழைவுச் சீட்டு மற்றும் அதன் மீதான வரி கணக்கிடப்படுதல்; மற்றும் அதற்கு கணக்கிடப்படும் வரி மற்றும் கேளிக்கை இடத்தின் ஒரு பகுதியிலிருந்து பிற இடத்திற்கு மாறுதலுக்கு செலுத்த வேண்டிய வரிகளுக்கான மற்றும் இருக்கைகளுக்காக அல்லது பிற தங்கும் வசதிகளுக்காக பணம் செலுத்துவதற்காக;

(b) தடைக் கட்டுகளை அல்லது இயந்திர பொறி அமைப்புகளை பயன்படுத்துவதற்காக (வெவ்வேறுத் தொகையின் செலுத்தத்திற்காக அதே தடைக் கட்டையை அல்லது இயந்திர பொறி அமைப்பை பயன்படுத்துவதை தடுத்தல் உள்ளடங்கலாக) மற்றும் தடை கட்டைகளினால் அல்லது இயந்திர பொறி அமைப்பினால் சேர்க்கையின் பதிவாவணங்களை உரியவாறு வைப்பதற்காக;

(c) அனுமதியை ஆய்வு செய்வதற்காக, கேளிக்கை தொழில் உரிமையாளரால் கணக்குகளை வைத்து வருவதற்காக மற்றும் விவர அறிக்கைகளை அளிப்பதற்காக;

(d) கேளிக்கை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதற்காகவோ அல்லது செலுத்திய பணத்தை திரும்ப கோருவதற்காகவோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்காக மற்றும் முடிவு செய்வதற்காக;

(e) இந்தச் சட்டத்தின்படி கேளிக்கை வரியை வசூல் செய்வதற்காக மற்றும் வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பால் அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக;

(f) உள்ளாட்சி அதிகார அமைப்பின் அதிகார எல்லைக்குள் அல்லது அத்தகைய பரப்பிடத்தின் பகுதி எதிலும், பரப்பிடத்தில் கேளிக்கை வரியை வசூல் செய்வதற்கு நபர் எவருக்கும் அதிகாரம் அளிப்பதற்காக மற்றும் அத்தகைய வசூல் தொடர்பாக உள்ளாட்சி அதிகார அமைப்பின் அலுவலர்களால் அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக;

(g) கேளிக்கை இடம் எதனிலும் கடமை எதையும் ஆற்றும் நபர்களின் அனுமதிக்காக அல்லது கேளிக்கை எதுவும் தொடர்பாக அல்லது இந்தச் சட்டத்தால் அல்லது இந்தச் சட்டத்தின்படி அல்லது பிற சட்டம் எதனாலும் அவர்களுக்கு சுமத்தப்பட்ட கடமை எதற்காகவும், கேளிக்கைகளின் தொழில் உரிமையாளர்களால் அனுமதிகளை வழங்குவதற்காக;

(h) இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கைகள் தொடர்பான மேல்முறையீடுகளுக்காக, அத்தகைய மேல்முறையீடுகள் எந்த காலத்திற்குள் செய்யப்படுதல் வேண்டுமோ அந்த காலத்திற்காக மற்றும் அத்தகைய மேல்முறையீடுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களுக்காக.

## நோக்கக்—காரண விளக்கவுரை

**1939** ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1939) கேளிக்கை வரி விதித்து வசூலிப்பதற்கு மாநில அரசை இயல்விக்கிறது. அண்மையில், இந்திய அரசியலமைப்பானது **2016** ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நூற்று ஒன்றாம் திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக அரசியலமைப்புக்கான ஏழாம் அட்டவணையில் II ஆம் பட்டியல் – மாநிலப் பட்டியலின் **62** ஆம் பதிவானது பின்வருமாறு மாற்றாக அமைக்கப்பட்டிருக்கிறது:-

> ‘‘ **62.** ஓர் ஊராட்சி அல்லது ஒரு நகராட்சி அல்லது ஒரு மண்டல மன்றம் அல்லது ஒரு மாவட்ட மன்றம் இவற்றால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் அளவுக்கு கேளிக்கைகள் மற்றும் வேடிக்கை நிகழ்ச்சிகள் மீது வரிகள்’’.

மேற்சொன்ன பதிவின் வழி, கேளிக்கைகள் மீதும் வேடிக்கை நிகழ்ச்சிகள் மீதும் வரி விதித்து வசூலிப்பதற்கு ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அதிகாரமளிக்கப்படுகின்றன. உத்தேசிக்கப்பட்டுள்ள **2017** ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் **174** ஆம் பிரிவின்படி **1939** ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் X / 1939) நீக்கறவு செய்வதற்கு அரசு முடிவு செய்திருப்பதால், கேளிக்கைகள் மீதும் வேடிக்கை நிகழ்ச்சிகள் மீதும் வரி விதித்து வசூலிப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளை இயல்விக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வருவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் , ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் துறை அமைச்சர்.*

**சட்டமிற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 1(2), 32(1) 33(1) ஆகிய கூறுகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப விதிகளை செய்வதற்கு மற்றும் ஆணைகளை பிறப்பிப்பதற்கு அரசுக்கும் மற்றும் 6(1) (a), 8(1), 9(1) மற்றும் (2), 17(1), 21, 23(3), 29 மற்றும் 34 (1) ஆகிய கூறுகள் துணை விதிகளை செய்வதற்கு உள்ளாட்சி அதிகார அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்தவை அல்ல.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2017.**

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.—

**பகுதி—I.**

**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

**1.** (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி II.**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

414-B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 414-B ஆம் பிரிவில் , ''2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி III.**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

375–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 375–B ஆம் பிரிவில் , ''2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி IV.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

510AAA ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 510AA ஆம் பிரிவில் , ''2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி V.**

**1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981.

510AAA ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 511—AAA ஆம் பிரிவில்,, ''2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி VI**

**1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 27/1994.

10–Aஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் 10—A ஆம் பிரிவில், ''2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி VII.

### 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

10–Aஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில், “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 28/1994.

## பகுதி VIII.

### 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

10–Aஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில் , “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 29/1994.

## பகுதி IX.

### 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9**. 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

## பகுதி X.

### 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில் , “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/2008.

## பகுதி XI.

### 2008 ஆம் ஆண்டு வேலூார் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11**. 2008 ஆம் ஆண்டு வேலூார் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில் , “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 26/2008.

## பகுதி XII.

### 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**12.** 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/2008.

## பகுதி XIII.

### 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 24/2013.

## பகுதி XIV.

### 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில் , “2017 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/2013.

**<u>நோக்கக் –காரண விளக்கவுரை</u>**

தமிழ்நாடு தேர்தல் ஆணையம், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள்/மன்ற உறுப்பினர்களின் பதவிகளில் சாதாரணமாக உள்ள காலியிடங்களை நிரப்பும் நோக்கத்திற்காக அறிவிக்கை பிறப்பித்திருக்கிறது. இதற்கிடையில், மேற்சொன்ன அறிவிக்கையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் நீதிப் பேராணை மனு எண் 33984/2016 மற்றும் பல்வகை நீதிப் பேராணை எண்கள் 29329 மற்றும் 29330/2016–ல், சென்னை உயர்நீதிமன்றம் 04.10.2016 தேதியிட்ட அதனுடைய ஆணையில், மற்றவற்றுக்கு இடையில், 2016–ஆம் ஆண்டு டிசம்பர் 31 க்கு முன்னதாக தேர்தலை நடத்தவும் மற்றும் அத்தேர்தல் பணியை செய்து முடிப்பதற்க்காக புதிய அறிவிக்கையை பிறப்பிக்குமாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறது. மேலும், தற்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் பதவிக் காலம் விரைவில் முடிவடையவுள்ளதாலும் அவற்றை ஐந்தாண்டு காலத்திற்கு மேல் நீட்டிக்க முடியாது என்பதாலும் தேர்தல்கள் நடத்தப்படுகின்றவரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யுமாறு அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்கண்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் முறையே மாநில மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக இருப்பதால் சாதாரண தேர்தல்களுக்குப் பின்பு மன்றங்களை அமைக்கும்வரை பேரூராட்சிகளை, நகராட்சிகளை மற்றும் மாநகராட்சிகளை நிர்வகிப்பதற்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யுமாறு அரசை கேட்டுக் கொண்டிருந்தனர். சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை கருத்தில் கொண்டு, பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான தேர்தல் நடத்தும் வரையோ அல்லது 2016ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரையோ, இதில் எது முந்தியதோ அதுவரை மேற்சொன்ன பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் அதன் அதிகாரங்களை செலுத்துவதற்கும், பணிகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக தனி அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டி பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்புடைய சட்டங்களை 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (மூன்றாவது திருத்தம்) அவசரச் சட்டத்தால் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2016) திருத்தம் செய்யப்பட்டது. மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு இணங்க பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளை நிர்வகிப்பதற்கு தனி அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர்.

**2.** பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டங்களின்படி, பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் வாக்காளர் பட்டியல்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளை பொறுத்து அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காக தயாரிக்கப்பட்ட மற்றும் திருத்தம் பெற்ற வாக்காளர் பட்டியலும் ஒரே மாதிரியதானதாக இருத்தல் வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி தேர்தலை விரைவில் நடத்தும் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காக வாக்காளர் பட்டியலுடன் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணி விரைவில் முடிக்கப்படும். வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்த்து முடிக்கவும் அதனை புகைபடத்துடன் பதிவிறக்கம் செய்வதும் விரைவில் முடிக்கப்படும். வாக்காளரின் புகைப்படத்துடன் கூடிய துணை வாக்காளர் பட்டியலை உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நீதிப் பேராணை எண் 33984/2016ன் ஆணைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்சொன்ன மேல்முறையீட்டு வழக்கு 12 ஜுலை 12ம் நாளுக்கு கேட்புக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. மேற்சொன்ன மேல்முறையீட்டை தவிர்த்து, சிறப்பு விடுப்பு(சிவில்) மனு எண் 28881–28883 /2016 நீதிமன்ற வழக்கு எண் 23411/2016 மற்றும் 23417/2016க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சிறப்பு விடுப்பு மனுவில் உச்சநீதிமன்றமானது அக்டோபர் 6, 2016 அன்று தேர்தல் நடத்துவதென்பது சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பிக்கும் லெட்டர் பேடன்ட்ஸ் மேல்முறையீட்டிற்கு உட்பட்டது என்று ஆணை பிறப்பித்ததுடன் வழக்கை கேட்புக்காக 16, ஜுலை 2017க்கு தள்ளி வைத்துள்ளது. உயர்நீதிமன்றத்தில் உள்ள மேல்முறையீட்டு மனு மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள சிறப்பு விடுப்பு(சிவில்) மனு நிலுவையிலுள்ளதைக் கருதியும் தேர்தல் ஏற்பாடுகளுக்கான சட்டபூர்வமாக தேவைப்படும் கால அளவு, கலந்தாலோசனை மற்றும் விதி திருத்தம் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தனி

அலுவலர்களின் பதவிக்காலத்தை கூடுமானவரை 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப் அரசைக் கோரியுள்ளது.

**3.** எனவே, தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 30 ஜுன் 2017க்கு அப்பால் 6 மாத காலத்திற்கு 31.12.2017 வரை நீட்டிப்பு செய்யவும் இந்நோக்கத்தை எய்துவதற்காக இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டத்தை திருத்த முடிவு செய்துள்ளது.

**4.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2017.**

**1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

261–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 261–A ஆம் பிரிவில், "2017 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள்வரை" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்".

**நோக்கக்—காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு தேர்தல் ஆணையம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் / மன்ற உறுப்பினர்களின் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர்களின் பதவிகளில் உள்ள சாதாரணமாக காலியிடங்களை நிரப்பும் நோக்கத்திற்காக அறிவிக்கை வெளியிட்டது. இதற்கிடையில் மேற்சொன்ன அறிவிக்கையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண் 33984/2016 மற்றும் பல்வகை நீதிப்பேராணை எண்கள் 29329 மற்றும் 29330/2016 இல், சென்னை உயர்நீதிமன்றம் 04.10.2016 தேதியிட்ட அதனுடைய ஆணையில், மற்றவற்றுக்கிடையில், 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31—க்கு முன்னதாக தேர்தலை நடத்தவும் மற்றும் அத்தேர்தல் பணியை செய்து முடிப்பதற்கு புதிய அறிவிக்கையை வெளியிடுமாறு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறது. மேலும், தற்பொழுது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் பதவிக் காலம் விரைவில் முடிவடையவுள்ளதாலும் அவற்றை ஐந்தாண்டு காலத்திற்கு மேல் நீட்டிக்க முடியாது என்பதாலும் தேர்தல் நடத்தப்படுகின்றவரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனி அலுவலர்களை அமர்த்தம் செய்யுமாறு அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்கண்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் அதிகாரங்களை செயலுறுத்துவதற்கு மற்றும் செயற்பணிகளை செய்து முடிப்பதற்கு, மேற்சொன்ன ஊராட்சிகளுக்கு சாதாரண தேர்தல் நடைபெற்று ஊராட்சிகளின் முதல் கூட்டம் நடைபெறும் நாள்வரை நியமனம் செய்யப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலம் 30.06.2017—ல் முடிவடையவுள்ளது.

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) வகையங்களின்படி கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் வாக்காளர் பட்டியலானது தொடர்பான அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற வாக்காளர் பட்டியலைப் போலவே, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் வாக்காளர் பட்டியலானது இருத்தல் வேண்டும். மற்றும் அத்தகைய வாக்காளர் பட்டியலை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் வாக்காளர் பட்டியலாக கொள்ளப்படுதல் வேண்டும். முன்னதாகவே ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்தும் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது, 2017 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டமன்ற வாக்காளர் பட்டியலுடன் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலுக்காக புதிய வாக்காளர் பட்டியலைத் தயார் செய்வதில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வாக்காளர் பட்டியலுடன் புதிய தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்காளர் பட்டியலை தயார் செய்யும் பணியானது வெகுவிரைவாக முடிவடையும் நிலையில் உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் வரைவினை இறுதியாக்கம் செய்வதற்காக மற்றும் புகைப்படங்களுடன் தேர்தல் வாக்காளர் பட்டியல்களை பதிவிறக்கம் செய்வதை நிறைவு செய்யும் மற்றும் சரிபார்க்கும் அறிக்கைகளானது வெகுவிரைவாக முடிவடையும். புகைப்படத்துடன் கூடிய இணைப்பு வாக்காளர் பட்டியலை தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மாநில தேர்தல் ஆணையமானது நீதிப்பேராணை மனு எண் 33984/2016 இல் உள்ள ஆணைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மேல்முறையீடு ஒன்றைச் செய்துள்ளது. சொல்லப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீடுகளுக்கு அப்பாற்பட்டு நீதிப்பேராணை மனு எண்கள் 23411/2016, 23417/2016 மற்றும் 23418/2016 இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக சிறப்பு அனுமதி மேல்முறையீட்டு (C) மனு எண்கள் 28881—28883/2016 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட சிறப்பு அனுமதி மனுவில் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றமானது 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 6 ஆம் நாளன்று சென்னை உயர்நீதி மன்றமானது பிறப்பிக்கும் ஆணைக்கு உட்பட்டு தேர்தலை நடத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்து உள்ளது.

**3.** சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதிப்பேராணை மேல்முறையீடுகள் மற்றும் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தில் உள்ள நீதிப்பேராணை மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டும் மற்றும் தேர்தல் நடவடிக்கையின்போது தேவைப்படலாகும் சட்டப்படியான காலத்தை கலந்தாய்வு மற்றும் விதி திருத்தங்களின் நோக்கத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு தேர்தல் ஆணையமானது, 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாளன்று தனி அலுவலர்களின் பதவிக்காலம் முடிவடைவதை கருத்தில் கொண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் அலுவல்களை நிர்வாகம் செய்வதற்காக தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 30.06.2017 இல் இருந்து அதிகபட்சமாக ஆறு மாத கால அளவிற்கு நீட்டிப்பு செய்வதற்கு அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

**4.** எனவே, அரசானது, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் மேலுமான ஆறு மாத கால அளவிற்கு 2017 ஜுன் 30 ஆம் தேதிக்கு அப்பாற்பட்டு தனி அலுவலரின் பதவிக்காலத்தை நீட்டிப்பு செய்வதற்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்வதற்கும் முடிவு செய்துள்ளது.

**5.** இந்த சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.